## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.46/2021**
**Prosecution Witness**:8

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முருகன் (PW8) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2021ம் தேதி நான் மலையம்பாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்தபோது 30.03.2021ம் தேதியன்று அதிகாலை 03.00 மணிக்கு மலையம்பாளையம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.கி.வரதராஜன் அவர்கள் பரமத்திவேலூர், பாண்டமங்கலம், தெற்கு தெருவை சேர்ந்த ஜெயராஜ் மகன் சிவா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் பதிவு செய்த மலையம்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.85/2021 ச/பி.279, 337 இதச வழக்கில் காயம்பட்ட நபர் 30.03.2021ம் தேதி அதிகாலை 05.10 மணிக்கு ஈரோடு லோட்டஸ் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்ற மலையம்பாளையம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.வரதராஜன் அவர்கள் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 30.03.2021ம் தேதி காலை 09.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான ஈரோடு – கரூர் ரோடு கருமாண்டாம்பாளையம், குளத்தோட்டம் கார்த்திகேயன் வீட்டு முன்பு சென்று சாட்சிகள் மலையப்பன் மற்றும் சிவக்குமார் ஆகியோர்கள் சம்பவ இடத்தை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:12:05 +05'30'

அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்தில் வைத்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் மயில்சாமி, கவின், மற்றும் பார்வைமகஜர் சாட்சிகளான சிவக்குமார் மற்றும் மலையப்பன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கின் இறந்துபோன ஜெயராஜ் என்பவரின் பிரேதத்தின் மீது காலை 11.30 மணி முதல் 13.30 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை ஒன்று தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன ஜெயராஜ் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை சடலக்கூராய்வுக்காக ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு தலைமைகாவலர் 673 அப்பாதுரை என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் சாட்சிகள் சிவா, பாக்கியம், பிரகாஷ், பிரபு, விஜயகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணையின் பொருட்டு மலையம்பாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ரோட்டை குறுக்கே கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பது தான் வழக்கு என்றால் சரிதான். ரோட்டை குறுக்கே கடக்க நெடுஞ்சாலை துறையால் குறியீடுகள் எதுவும் போடப்படவில்லை. அ.சா.1 புகார் கொடுப்பதற்கு முன்பாக அவரது அப்பா மருத்துவமனையில் சேர்வதற்கு முன்பாக நான் யாரையாவது விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது இரத்தக்கறை மற்றும் வாகனத்தின் உதிரி பாகங்கள் அங்கு இருந்ததா என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:12:11 +0530

தற்போது ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் கிடந்த வாகனங்களை நான் தான் காவல்நிலையத்திற்கு எடுத்து வந்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் மனு வாங்குவதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 15:12:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.